**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 254/2022**

**வா.சா.1 – தேவகி**

**<u>24–03–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வனிதாவிற்காக அவரது கணவர் முருகன் எதனால் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் வனிதா மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றம் மூலம் முருகன் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரா என்றால் நீதிமன்றம் தான் நியமித்தது. அந்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த உத்தரவையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வனிதாவும் சகோதரி என்று சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் நானும் வனிதாவும் சகோதரி என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வனிதாகும் சகோதரி என்று சொல்வதும் இறந்து போன யுவராஜ் எனது சகோதரர் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

2. ஜீவானந்தம் எனது தகப்பனார் என்பதற்கும் மகாலட்சுமி எனது தாயார் என்பதற்கும் அவர்களுக்கு 1977 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1981 ஆம் ஆண்டு மகாலட்சுமி ரயில்வே டிராக்கில் அடிபட்டு இறந்து விட்டார். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மகாலட்சுமியின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மகாலட்சுமியின் இறப்பு சான்றிதழில் அவரது தாயார் மற்றும் தந்தையார் பெயர் இல்லை என்றால்

மகாலட்சுமியின் தகப்பனார் இறந்துவிட்டார் அவரது தாயார் இன்னும் உள்ளார். அவர்களது பெயர் மகாலட்சுமி இறப்புச் சான்றிதழில் இல்லை என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மகாலட்சுமியின் இறப்புச் சான்றிதழ் எனது தாயார் மகாலட்சுமி உடையது அல்ல என்றும் வேறொருவருடையது என்றால் சரியல்ல. மகாலட்சுமி இறந்தபோது எனக்கு ஒரு வயது என்றும் எனது தங்கையான வனிதா 9 மாத குழந்தை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. 3ம் பிரதிவாதியை ஜீவானந்தம் திருமணம் செய்து கொண்டதும் அவர்களுக்கு 1988 ஆம் ஆண்டு யுவராஜ் என்ற மகன் பிறந்ததும் உண்மை என்ற போதும் அதற்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் ஜீவானந்தம் மற்றும் ஜோதிமணி ஒரே வீட்டில் குடியிருந்து வந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. என்னை எனது தாத்தா பாட்டி வளர்த்தார்கள் என்றால் தாத்தா, பாட்டி, ஆயா, அம்மா, சித்தி, அப்பா அனைவரும் சேர்ந்து வளர்த்தார்கள். நாங்கள் சித்தி சித்தப்பா உடன் ஒரே கூட்டு குடும்பமாக ஒரே வீட்டில் தான் இருந்தோம் நாங்கள் கூட்டுக் குடும்பமாக வசித்தோம் என்று சொல்வது பொய் என்றும் ஜீவானந்தமும் ஜோதிமணியும் தனியாக தான் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. ஜோதி மணியின் முன்னிலையில் எனக்கு திருமணம் நடைபெற்றதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வீடு மற்றும் இடம் உள்ளது. அது அவருக்கு எப்படி பாத்தியம் என்றால் அது தாத்தாவின் சொத்து. அது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு ஒரு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

4. சொத்து உள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பேத்தி என்ற முறையில் எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் தெரியும். சொத்தின் விபரங்களை வழக்கறிஞர் அறிவிப்புகளில் செல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சொத்தின் விபரம் எப்படி தெரியும் என்றால் எனது அப்பாவின் சகோதரர்கள் இருவர் உள்ளார்கள் அவர்கள் மூலம்

தெரிந்துகொண்டேன். முதலில் வாய்மொழியாக தெரிந்துகொண்டேன் பின்பு ஆவணங்களின் வாய்லாக தெரிந்துகொண்டேன். எந்த ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் தாத்தாவின் உயிலைப்பார்த்து தெரிந்துள கொண்டேன். அதன் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 3ம் பிரதிவாதியிடமும் அவரது மகனிடமும் பாகப்பிரிவினை கேட்டேன் என்றும் ஜீவானந்தத்தின் இறப்பு வாரிசு சான்றிதழ் கேட்டேன் என்றும் நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 15.08.2021ம் தேதியன்று யுவராஜீன் சொத்தில் நான் பாகம் கேட்டதாகவும் ஜீவானந்தத்தின் இறப்பு வாரிசு கேட்டதாகவும் இவ்வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. 2015ம் ஆண்டு யுவராஜ் பெயரில் 3ம் பிரதிவாதி பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் யுவராஜ் CAN Fin வங்கியில் கடன் பெற்று அடமான பத்திரம் எழுதிக்கொடுத்திருப்பதாக நான் சொல்லும் விபரம் அவர்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட விபரம் என்றும் அதற்கும் எனக்கு தொடப்பில்லை என்றால் சரியல்ல. 28.08.2021ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா எனறால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 05.02.2022ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா எனறால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள 1 முதல் 3 ஆவணகளின் ஜீவானந்தம் பெயர் இல்லை என்றால் PAN Cardல் உள்ளது. PAN Cardல் நான் சொன்னத் அடிப்படையில் தான் விபரங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் எனது அப்பா

தான் அதனை வாங்கிக்கொடுத்தார். மேற்படி ஆவணங்கள் ஜீவானந்தம் இறப்பிற்கு பின்னிட்டு வாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது திருமன அழைப்பிதழில் எனது தாயாரின் பெயர் இல்லை என்றால் சரிதான். திருமன பத்திரிக்கை வழக்கிற்காக உறுவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ஜீவானந்தம் உயிருடன் இருந்து அவர் எடுத்துக்கொடுத்த அவணம் என்று வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வனித்தாவின் ஆதார் அடையாள அட்டை, வாக்காலன் அடையாள அட்டையில் ஜீவானந்தத்தின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. வ.சா.ஆ.7 வனித்தாவின் பள்ளி மாற்றுச்சான்றிதழ் ஆகும். இது யாரால் எப்போது வாங்கப்பட்டது என்றால் தெரியாது. எனது PAN Card எனது கணவர் இறந்த பிறகு எனது சித்தப்பாவும் தம்பியும் எடுத்துக்கொடுத்துள்ளார் என்று சாட்சி தானாக முன்வந்து சாட்சியம் அளிக்கிறார்.

7. 8 வது ஆவணம் வழக்கிற்கு தேவையற்ற ஆவணம் என்றால் சரியல்ல. வனித்தாவின் திருமனப்பத்திரிக்கையில் எனது தாயார் பெயர் இல்லை என்றால் சித்திப்பெயர் உள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விரங்களை நான் தாக்கல் செய்யவில்லை. 18 வது ஆவணத்தின் விசாரணையில் ஜோதி மணி வந்திருந்ததார் என்றால் சரிதான். வா.சா.ஆ.17 பற்றி பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகைப்படத்தில் நெகடிவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே அது சாட்சியச் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 ல் 3 முதல் 6 பிரதிவாதிகள் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவரானது என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.